

சட்டமேதை அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு விழுப்புரம் பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள அவரின் திருவுருவச் சிலைக்கும், விழுப்புரம் கலைஞர் அறிவாலயம் அருகில் அவரின் திருவுருவச் சிலைக்கும், மாவட்ட கழக அலுவலகமான விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் அவரின் திருவுருவப் படத்திற்கு அஞ்சலி செலுத்தி அமைச்சர் முனைவர் க.பொன்முடி தலைமையில் உறுதிமொழி ஏற்றுக் கொள்ளப்பட்டது. விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி , விழுப்புரம் மத்திய மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ, அன்னியூர் சிவா எம்.எல்.ஏ., ம.ஜெயசந்திரன், இரா.ஜனகராஜ், செ. புஷ்பராஜ், தயா.இளந்திரையன், எம்.தேன்மொழி, வழக்கறிஞர் சுவை.சுரேஷ் உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன், தலைமையில் நெய்வேலி என்.எல்.சி, தொ.மு.ச. வளாகத்தில் சட்ட மேதை டாக்டர் அம்பேத்கர் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு சமத்துவநாள் உறுதிமொழியினை கழகத்தினர்,தொ.மு.ச,வினர் ஏற்றுகொண்டனர். சபா.இராசேந்திரன் எம்.எல்.ஏ, முன்னிலை வகித்தார். புதுக்குப்பம் அம்பேத்கர் சதுக்கத்தில் அமைந்துள்ள அண்ணல் அம்பேத்கர் திருஉருவச்சிலைக்கு அமைச்சர் சி.வெ.கணேசன் தலைமையில், மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டு உறுதிமொழி ஏற்றுகொண்டனர். மாவட்ட கழக நிர்வாகிகள் ,ஒன்றிய கழக நிர்வாகிகள், தொ.மு.ச நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### விழுப்புரம் வடக்கு மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி சார்பில்

# மேல்சிவிரியில் முதல்வர் பிறந்த நாள் விழா -1500 பேருக்கு நல உதவிகள்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்!

திண்டிவனம், ஏப். 15 -

விழுப்புரம் வடக்கு மாவட்ட விவசாய தொழிலாளர் அணி சார்பில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சரின் பிறந்த நாளை முன்னிட்டு 1500 நபர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கலந்துகொண்டு 5 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் 72 ஆவது பிறந்தநாள் விழா முன்னிட்டு விழுப்புரம் வடக்கு மாவட்ட விவசாய தொழிலாளர் அணி சார்பில் 1500 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி ஒலக்கூர் மேற்கு ஒன்றியம் மேல்சிவிரி கூட்டு சாலையில்நடை பெற்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட விவசாய தொண்டர் அணி தலைவர் அஞ்சாஞ்சேரி கணேசன் மாவட்ட விவசாய தொண்டர் அணி துணைத் தலைவர் முருகேசன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர்கள் ஜானகிராமன், குமார், சம்பத், ரவி, குமரேசன், முத்துவேல், ஆகியோர் முன்னிலை வகித்தனர்

விழுப்புரம் வடக்கு மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளரும், ஒலக்கூர் ஒன்றிய குழு உறுப்பினர் ஊரல் அண்ணாதுரை தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில்

விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும்,செஞ்சி தொகுதிசட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு 1000க்கும்மேற்பட்ட பயனாளிகளுக்கு 5 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தென்னைமரக்கன்று, வேட்டி, சேலை, டிபன்பாக்ஸ், அறுசுவை உணவு உள்ளிட்ட நல திட்ட உதவிகளைவழங்கி சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, செந்தமிழ் செல்வன், மாநில தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர், மாவட்ட பொருளாளர் ரமணன், ஒன்றிய செயலாளர்கள் சொக்கலிங்கம், ராஜாராமன்,திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன்,பொதுக்குழு உறுப்பினர் சாந்தி ஏழுமலை, மாவட்ட கவுன் சிலர் மனோ சித்ரா ராஜேஸ்வரன், ஒன்றிய கழக நிர்வாகிகள் அமராவதி ,சுப்ரமணி, ஆர். காளி, அன்பரசி ஜெயபிரகாஷ், திருஞான சம்பந்தம், அரிகிருஷ்ணன், கேகாளி மணி முருகன் கல்யாணிஉள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளரும் ஒலக்கூர் ஒன்றிய கவுன்சிலர் ஊரல் அண்ணாதுரை செய்தார். மாவட்ட ஆதிதிராவிடர் நல அணி குழு துணை அமைப்பாளர் ராஜேந்திரன் நன்றி கூறினார்.

### தென்காசி வடக்கு மாவட்டம் – சங்கரன் கோவில் தெற்கு ஒன்றியக் கழகம் சார்பில்

# முதல்வர் பிறந்த நாள் விழா - நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டம்!

## லாலா சங்கரபாண்டியன் தலைமை! ஈ.ராஜா எம்.எல்.ஏ. முன்னிலை! இரா.இராஜீவ்காந்தி சிறப்புரை!

தென்காசி, ஏப். 15 -

தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவில் தெற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் எல்லோருக்கும் எல்லாம் திராவிட மாடல் நாயகரின் பிறந்த நாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் 08.04. 2025 செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு கலைஞர் திடல் வேட்டரம்பட்டியில் சங்கரன்கோவில் தெற்கு ஒன்றிய செயலாளர்,ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் லாலா சங்கரபாண்டியன் தலைமையில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ. ராஜா எம்.எல்.ஏ. முன்னிலை யில் நடைபெற்றது. கிளைச் செயலாளர் ஹைதர் அலி வரவேற்றார். இந்நிகழ்வில் மாநில மாணவர் அணி செயலாளர் இரா.ராஜீவ்காந்தி பங்கேற்று சிறப்புரை யாற்றினார்.

நிகழ்வில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ச.தங்கவேலு, பரமகுரு, மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் செண்பக விநாயகம்,நெல்லை கிழக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு, மாவட்ட அவைத்தலைவர் பத்மநாபன், துணைச் செயலாளர்கள் மனோகரன்,ராஜதுரை,புனிதா, பொருளாளர் இல.சரவணன், பொதுக்குழு உறுப்பினர் பத்திரம் சாகுல் ஹமீது, ஒன்றிய செயலாளர்கள் கடற்கரை, சேர்ம துரை, பெரியதுரை, பொன் முத்தையா பாண்டியன், கிறிஸ்டோபர்,வெள்ளத்துரை, ராமச்சந்திரன்,நகரச் செயலாளர் பிரகாஷ் (சங்கரன்கோவில்)அந்தோணிசாமி (புளியங்குடி) இளம் பேச்சாளர் ரேவதி, ஒன்றிய குழு துணைத் தலைவர் செல்வி,ஒன்றிய துணை செயலாளர்கள் நடராஜன்,வைரமுத்து, மணிகண்டன், தங்கம்மாள்,ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் திருமலை சாமி,பேரூர் கழக செயலாளர்கள் ரூபி மனோகரன், கே.டி.சி.குருசாமி,சேது சுப்ரமணியன், சங்கரன்கோவில் நகர்மன்ற தலைவர் உமா மகேஸ்வரி சரவணன், அணி நிர்வாகிகள் பிச்சையா,சரவணன், கார்த்தி,சிவாஜி,ரஜினிகாந்த், கிளைக் கழகச் செயலாளர்கள் கடல்துரை, தர்மராஜ்,சந்திரன்,ஈஸ்வரன்,ராஜன், லெனின், ராமகிருஷ்ணன், மதியழகன், முருகையா, பூக்குமார், வெள்ளத்துரை, கருப்பசாமி,அலஞ்சி பாண்டியன், முருகன், கிருஷ்ணசாமி, கருப்பசாமி,சண்முகையா, சுப்பையா,வெள்ளத்தாய், பரமசிவம், மாரிச்சாமி,மருதையா,தங்கதுரை, சண்முகராஜ்,கோவில்சாமி,கருப்பசாமி, வேலுச்சாமி, முருகன், ராமசாமி, பொன்னுச்சாமி,வெள்ளத்துரை, கணேசன் கோட்டைச்சாமி சேர்மன்,அய்யனுச்சாமி, குருவராஜ், லட்சுமி நாராயணன், சண்முகபாண்டி,வேலுச்சாமி,பாஸ்கர், பழனிச்சாமி,சண்முகையா, பூவையா, பன்னீர், மாரியப்பன், ராசையா,ஈஸ்வரன், முப்பிரி ராஜ்,சுப்பிரமணியன், செல்வ சுப்பிரமணியன், கழகப் பேச்சாளர்கள் நெல்லை முத்தையா, மில் ஜே.குமார் உள்பட ஒன்றிய குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள்,கழகத் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் உதயகுமார் நன்றியுரையாற்றினார்.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை சங்கரன்கோவில் தெற்கு ஒன்றிய செயலாளர் ஒன்றிய குழு தலைவர் லாலா சங்கரபாண்டியன் செய்திருந்தார்.



விழுப்புரம் வடக்கு மாவட்ட விவசாய தொழிலாளர் அணி சார்பில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சரின் பிறந்த நாளை முன்னிட்டு ஒலக்கூர் ஒன்றியம் மேல்சிவிரி ஊராட்சியில்1500 நபர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கலந்துகொண்டு 5 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன்முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, செந்தமிழ் செல்வன், தலைமை தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், மாவட்ட பொருளாளர் ரமணன், திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன்,மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் ஊரல் அண்ணாதுரை உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

# டாக்டர் அம்பேத்கர் அறக்கட்டளை சொற்பொழிவு!

## ஆ.இராசா எம்.பி. சிறப்புரை! முனைவர் எஸ்.ஏழுமலை தலைமை!

சென்னை, ஏப். 15 -

சென்னைப் பல்கலைக்கழகம் மற்றும் மக்கள் கல்வி அறக்கட்டளை டாக்டர் அம்பேத்கர் அகாடமி இணைந்து நடத்தும் டாக்டர் அம்பேத்கர் அறக்கட்டளை சொற்பொழிவு இன்று (15.04.2025 - செவ்வாய்) மாலை 3.00 மணியளவில் சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு கட்டிடத்தில் நடைபெறுகிறது.

சிறப்பு சொற்பொழிளராக முன்னாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா எம்.பி. கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகிறார். சென்னைப் பல்கலைக்கழக பதிவாளர் பேராசிரியர் முனைவர் எஸ்.ஏழுமலை தலைமை தாங்குகிறார்.

மேலாண்மை அறங்காவலர், டாக்டர் அம்பேத்கர் அகாடமி சி.செல்லப்பன் ஐ.ஏ.எஸ் ஓய்வு வரவேற்றுப் பேசுகிறார்.

பேராசிரியர் முனைவர் எஸ்.தேவதாஸ் (இணை மேலாண்மை அறங்காவலர், டாக்டர் அம்பேத்கர் அகாடமி) நோக்க உரையாற்றுகிறார்.

முனைவர் ஜி.ராஜசேகர் (துணைத்தலைவர். சென்னைப் பல்கலைக்கழகம்) நன்றி கூறுகிறார்.

தமிழ் மாணவர் மன்றம் சென்னைப் பல்கலைக்கழகம்’ அனவரையும் வருக வருக என வரவேற்கிறது.

# பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாட்டின் சாதனை தொடரட்டும்!

## ‘இந்து தமிழ் திசை’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஏப். 15 -

பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாட்டின் சாதனை தொடரட்டும் என்று ‘இந்து தமிழ் திசை’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.

இது குறித்து ஏப். 14, 2025 தேதிய ‘இந்து தமிழ் திசை’ நாளேடு தலையங்கத்தில் கூறியுள்ளதாவது:-



இந்து தமிழ்

பொருளாதார வளர்ச்சியில் முதலிடம்: தமிழகத்தின் சாதனை தொடரட்டும்!

கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்குப் பொருளாதார வளர்ச்சியில் மிகப் பெரிய உயரத்தை அடைந்திருக்கிறது தமிழ்நாடு. 2024-25இல், ‘உண்மையான பொருளாதார வளர்ச்சி’யில் 9.69 சதவீதத்தைத் தொட்டு, இந்தியாவின் முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. 2032-33இல் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்னும் இலக்கை அடையத் திட்டமிட்டுவரும் தமிழ்நாடு அரசு, அதை நோக்கிய பயணத்தில் உறுதியாக நடைபோடுவதை இந்தச் சாதனை உறுதிசெய்கிறது.

பணவீக்கத்தைக் கணக்கில் கொள்ளாமல் மதிப்பிடப்படும் உண்மையான பொருளாதார வளர்ச்சியானது ஒரு மாநிலம் அடைந்துவரும் பொருளாதார வளர்ச்சி மீதான துலக்கமான பார்வையை அளிக்கக்கூடியது. அந்த வகையில், மத்திய புள்ளியியல் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் தரவுகளின்படி. 2023-24இல் ரூ.15.71 லட்சம் கோடியாக இருந்த தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) கடந்த 2024-25இல் ரூ.17.24 லட்சம் கோடியாக உயர்ந்திருக்கிறது. 2011-12ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படும் நிலையான விலை மதிப்பின்படி இது 9.69% வளர்ச்சி ஆகும். சேவைகள் துறை (12.7%), இரண்டாம் நிலைத் துறை (9%) ஆகியவற்றில் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சி இதற்கு முக்கியப் பங்களித்திருக்கிறது.

இதற்கு முன்னர் 2017-18இல் 8.59% என்கிற உயரத்தைத் தொட்டிருந்த தமிழ்நாடு, பெருந்தொற்றுக் காலத்தில் (2020-21) நாட்டின் பெரும்பாலான மாநிலங்கள் எதிர்மறை வளர்ச்சியைக் கண்ட நிலையிலும், 0.07% என நம்பிக்கையூட்டும் வகையில் ஸ்திரத்தன்மை காட்டியது.

நிதிநிலை அறிக்கையை ஒட்டி, கடந்த மாதம் தமிழ்நாடு அரசு முதன்முதலாக வெளியிட்ட பொருளாதார ஆய்வறிக்கை, கடந்த ஆண்டு சென்னை பொருளியல் நிறுவனத்தின் பொருளாதார நிபுணர்கள் முன்வைத்த கணிப்பு ஆகியவற்றை விடவும் அதிக வளர்ச்சியைத் தமிழ்நாடு அரசு கண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. பணவீக்கத்தையும் கணக்கில் கொண்டு மதிப்பிடப்படும் பெயரளவு வளர்ச்சி விகிதம் என்னும் அடிப்படையிலும் தமிழ்நாடு 14.02 சதவீத வளர்ச்சி பெற்று முதலிடத்தில் இருக்கிறது.

ஒரு மாநிலத்தில் உற்பத்தியாகும் பொருள்கள் மற்றும் சேவைகளின் மொத்த மதிப்பிலும் (ஜி.எஸ்.வி.ஏ.) தமிழ்நாடு 12.7 சதவீதத்துடன் முதலிடத்தில் இருக்கிறது. ஜிஎஸ்விஏ தேசிய சராசரி 7.3% மட்டும்தான் என்பது கவனிக்கத்தக்கது. 2025-26 நிதி ஆண்டில், அனைத்துத் துறைகளிலும் 0.5% கூடுதல் வளர்ச்சி இருந்தால், தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 10.7 சதவீதத்தை எட்டும் எனப் பொருளாதார அறிஞர்கள் கணித்திருக்கிறார்கள்.

‘அடிப்படைகளில் உறுதி, நிலையான நிர்வாகம், தெளிவான தொலைநோக்குப் பார்வை ஆகியவற்றைக் கொண்டு நமது மாநிலம், மக்களின் எதிர்காலத்தை வடிவமைத்து வருகிறது. ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரம் என்னும் பேரிலக்கை நோக்கி வலிமை, உறுதியோடு விரைந்து கொண்டிருக்கிறோம்”” என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்திருக்கிறார். நிதி ஒதுக்கீட்டில் மத்திய அரசு காட்டும் பாரபட்சத்துக்கு நடுவே, நம் முதல்வர் தீட்டிய திட்டங்களின் வெற்றிக்கு இந்தப் புள்ளிவிவரமே சாட்சி எனத் துணை முதல்வர் குறிப்பிட்டிருப்பதன் பின்னணியில் அரசியல் இருந்தாலும், அரசியல் மோதல்களைக் காரணமாகக் காட்டி, வளர்ச்சியில் கோட்டை விடாமல் செயல்படுவதற்காகத் தமிழ்நாடு அரசு பாராட்டைப் பெறுகிறது. பல நாடுகள் பொருளாதாரத்தில் தடுமாறிக்கொண்டிருக்கும் நிலையில், இந்தியாவின் ஒரு மாநிலமாகத் தமிழ்நாடு முன்னெடுக்கும் பொருளாதாரச் செயல்பாடுகள் மிகுந்த நம்பிக்கை அளிக்கின்றன.

பாலினச் சமத்துவம், அனைத்துப் பகுதிகளுக்கும் சமமான வளர்ச்சி என அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியில் தொடர்ந்து கவனம் செலுத்தி, இந்தச் சாதனையை எட்டியிருப்பதாக முதல்வர் குறிப்பிட்டிருக்கிறார். இதை அலங்கார வார்த்தைகளாக மட்டும் அல்லாமல் உளப்பூர்வமாக முன்னெடுத்துச் சென்றால் தமிழகம் மேலும் தலைநிமிரும்!

இவ்வாறு அதில கூறப்பட்டுள்ளது.

### நெல்லை கிழக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில்

# இல்லம் தோறும் மாணவர் அணி சேர்க்கை முகாம்!

## அலெக்ஸ் அப்பாவு ஏற்பாட்டில் – இரா.ஆவுடையப்பன் பங்கேற்பு!

நெல்லை, ஏப். 15 -

நெல்லை கிழக்கு மாவட்டம் மாணவர் அணி சார்பில் இல்லம் தோறும் மாணவரணி சேர்க்கை முகாம் வள்ளியூர் விஜயா மஹால் மற்றும் பணகுடியில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று முகாமை துவக்கி வைத்தார்.இதில் 200 மாணவர்கள் பங்கேற்றனர்.

திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க,

கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி,கழக முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர், நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சர் கே.என்.நேரு

மாநில மாணவர் அணி செயலாளர் இரா. ராஜீவ் காந்தி ஆகியோர் அறிவுறுத்தலின் படி நெல்லை கிழக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் இல்லம் தோறும் மாணவர்கள் சேர்க்கை முகாம் வள்ளியூர் விஜயா மஹாலில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று முகாமை துவக்கி வைத்து மாணவர்களை வரவேற்றார்.

நிகழ்வில் மாவட்டத் துணை செயலாளர் நம்பி,மாநில தொண்டரணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம் மாநில விவசாய தொழிலாளரணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன்,

தலைமை செயற்குழு உறுப்பினர் சித்திக், ஒன்றியச் செயலாளர்கள் ஜோசப் பெல்சி, ராஜன்,செல்வகருணாநிதி,வள்ளியூர் பேரூர் செயலாளர் சேதுராமலிங்கம்,

பேரூராட்சி துணைத் தலைவர் கண்ணன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் மாடசாமி,மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் லட்சுமணன்,அறங்காவலர் குழு உறுப்பினர் சமூகை முரளி மற்றும் ஆதி பாண்டி,அயப்பன் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து பணகுடியில் மாணவரணி சேர்க்கை முகாம் நடைபெற்றது. நடைபெற்ற இந்த இரண்டு முகாம்களில் சுமார் 200 மாணவர்கள் பங்கேற்றனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் தியாகதுருகம் பேரூராட்சியில் போட்டி தேர்விற்கு தயாராகும் மாணவர்கள் மற்றும் பள்ளி கல்லூரி மாணவர்கள் எளிதில் புத்தகங்களை எடுத்து படிப்பதற்காக கிளை நூலகம் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்து வந்த நிலையில் சுமார் 22 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தியாகதுருகத்தில் கிளை நூலகம் அமைக்க தமிழ்நாடு அரசு அறிவித்த நிலையில் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட கிளை நூலகத்தை சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொளி காட்சி வாயிலாக தமிழக முதல்வர் திறந்து வைத்தார். தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் கிளை நூலகத்தில் குத்துவிளக்கினை கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் மலையரசன் துவக்கி வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார் உடன் பேரூராட்சி தலைவர் பேரூராட்சி துணை தலைவர் மற்றும் பேரூராட்சி கவுன்சிலர்கள் மற்றும் கழக நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.